DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | **:** | **O.S. 150 / 2024** |
| **Deposition of witness for** | **:** | **Plaintiff** |
| **Serial No. of Witness** | **:** | **PW1** |
| **Name** | **:** | அருணாச்சலம் |
| **Father's Name** | **:** | அண்ணாமலை |
| **Village** | **:** | இடையன்குளம் |
| **Taluk** | **:** | நான்குநேரி |
| **Age** | **:** | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 03.11.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை.

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தை எழுத்துமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. 03.10.2006 வாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் அசல் **வா.சா.ஆ 1**. பட்டா எண் 1307 அசல் **வா.சா.ஆ 2**. தபசில் சொத்திற்கான தீர்வை ரசீது 11 எண்ணம் அசல் **வா.சா.ஆ 3**. தபசில் சொத்திற்கான மின்கட்டண ரசீதுகள் எண்ணம் 10 அசல் **வா.சா.ஆ 4**. 23.09.2024 2ம் பிரதிவாதி கொடுத்த நோட்டீஸ் **வா.சா.ஆ 5**. 30.10.2024 ம் தேதியில் 2 ம் பிரதிவாதி கொடுத்த நோட்டீஸ் **வா.சா.ஆ 6**. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.